**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## 2022-ஆம் ஆண்டுக்கான ஸ்டார்ட் அப் தரவரிசையில் தமிழகம் முதலிடம்: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை:** 2022-ஆம் ஆண்டுக்கான ஸ்டார்ட் அப் தரவரிசையில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளதாக முதல்வர் ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் பகிர்ந்த சமூக வலைதளப் பதிவில், "StartUp தரவரிசைப் பட்டியலில், கடந்த ஆட்சிக் காலத்தில் 2018-இல் கடைசித் தரநிலையில் இருந்த தமிழ்நாடு, நமது திராவிட மாடல் ஆட்சியில் 2022-ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் முதலிடத்தை அடைந்துள்ளது!

TANSEED புத்தொழில் ஆதார நிதி, பட்டியலினத்தவர்/பழங்குடியினர் தொழில் நிதியம், LaunchPad நிகழ்வுகள் என ஒட்டுமொத்தமாக நமது அரசு முன்னெடுத்த மறுசீரமைப்பு முயற்சிகளாலேயே தமிழ்நாடு இன்று சிகரத்தில் அமர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 7600 StartUp நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் 2022-ஆம் ஆண்டில் மட்டும் 2250 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதே நாம் நிகழ்த்திய பாய்ச்சலுக்குச் சான்று. இந்தச் சாதனை மாற்றத்தைச் சாத்தியமாக்க உழைத்த அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் அதிகாரிகளுக்கு எனது பாராட்டுகள்!

இந்த இடத்தைத் தக்கவைக்கவும் மேலும் உயரங்களைத் தொட உழைக்கவும் வேண்டுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## சென்னை - பெங்களூரு - மைசூருவுக்கு அதிவேக புல்லட் ரயில் இயக்க திட்டம்: இரண்டரை மணி நேரத்தில் செல்லலாம்



பிரதிநிதித்துவப் படம்

**சென்னை:** சென்னை - பெங்களூரு - மைசூரு வரையிலான 435 கி.மீ. தூரத்துக்கு அதிக வேக ரயில் போக்குவரத்து (புல்லட் ரயில்) தொடங்க தேசிய அதிவேக ரயில் கார்ப்பரேஷன் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதில், சென்னை - மைசூரு இடையே அதிகவேக பாதையில் 9 ரயில் நிலையங்களுடன் அதிவேக ரயில் (புல்லட்) இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம், பயண நேரம் 2 மணி நேரம் 25 நிமிடங்களாக குறையும். இந்த ரயில் அதிகபட்சமாக 350 கி.மீ. வேகத்தில் செல்லும். 750 பேர் பயணம் செய்யலாம்.

இந்தியாவின் ஆட்டோமொபைல் உற்பத்தி மையமாக திகழும் சென்னையையும், வளர்ந்து வரும் தொழில்நுட்பம் மற்றும் ஸ்டார்ட் அப் மையமான பெங்களூருவையும், கர்நாடகாவின் கலாச்சார தலைநகரான மைசூருவையும் இணைக்கும் லட்சிய திட்டத்தை தேசிய அதிவேக ரயில் கார்ப்பரேஷன் முன்னெடுத்து வருகிறது.

**9 ரயில் நிலையங்கள்:** தமிழகத்தில் சென்னை, பூந்தமல்லி, அரக்கோணம், ஆந்திர மாநிலத்தில் சித்தூர், கர்நாடகா மாநிலத்தில் பங்காரப்பேட்டை, பெங்களூரு, சென்னப்பட்டிணா, மாண்டியா, மைசூரு ஆகிய 9 நிலையங்களை கொண்ட அதிவேக ரயில் திட்டம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிவேக ரயில் போக்குவரத்துக்கான ஆரம்பகட்ட அடிப்படை பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பொது சீரமைப்பு வரைதல், சர்வே மற்றும் பயன்பாடுகளை அடையாளம் காண்பது போன்ற அத்தியாவசிய அடிப்படை பணிகளுக்கு ஏற்கெனவே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. நில அளவீடு உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வழித்தட பாதையில் நடந்துவரும் நில அளவீடு மற்றும்பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுடன் கலந்தாலோசிப்பது போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன.

விரிவான திட்ட அறிக்கையில், சரியான சீரமைப்பு, நிலைய இருப்பிடங்கள், பயணிப்போர் மதிப்பீடு விவரம் மற்றும் கட்டண அமைப்பு போன்ற முக்கியமான விவரங்கள் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.25 மணி நேர பயணம்:** பெங்களூரு - சென்னை விரைவுச்சாலையில் கர்நாடகா மாநிலம் பெங்களூரு அருகே ஹோஸ்கோட் மற்றும் சென்னை அடுத்த பரந்தூரில் 2-வது விமான நிலையம் அமைய உள்ள இடத்தின் அருகே அதிவிரைவு ரயில் பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக 350 கி.மீ. வேகத்தில் செல்லும் புல்லட் ரயில் மைசூரு - சென்னை பயணத்தை வெறும் 2 மணி நேரம் 25 நிமிடங்களில் நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, வந்தே பாரத் விரைவு ரயிலில்பயண நேரம் 6 மணி 30 நிமிடங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் முன்னாள் அதிகாரி ஒருவர் கூறியதாவது: சென்னை - பெங்களூரு - மைசூரு அதிவேக ரயில் திட்டம் வணிக பயணத்துக்கு ஒரு பெரிய ஊக்கமாக இருக்கும். இதன்மூலம் வணிக நிறுவனங்களின் வருகை, புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாவது அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை- பெங்களூரு - மைசூரு இடையே பயண நேரம் குறையும். இதன்மூலம், தொழில் ரீதியான பயணங்கள் அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**4 வழித்தடங்கள்:** நாட்டில் சென்னை - மைசூரு(435 கி.மீ.), டெல்லி - அமிர்தசரஸ் (459 கி.மீ), மும்பை - ஹைதராபாத் (711 கி.மீ), வாராணசி -ஹவுரா (760 கி.மீ.) ஆகிய 4 வழித்தடங்களில் அதிவேக ரயில் போக்குவரத்தை தொடங்க தேசிய அதிவேக ரயில் கார்ப்பரேஷன் நிறுவனம் திட்டமிட்டது.

இதில் ஒன்றாக சென்னை - மைசூரு அதிவேக ரயில் போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்த கள ஆய்வு பணிகள் தொடங்கி நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

ரயில்வே, மெட்ரோ ரயில், பேருந்துகளை இணைக்கும் வகையில், பல்வகை மாடல் போக்குவரத்து மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. சில மாதங்களில் சீரமைப்புக்கான கணக்கெடுப்பு முடிந்தபிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்பட உள்ளது.

**750 பேர் பயணிக்கலாம்:** மெட்ரோ ரயில் நெட்வொர்க் போன்ற நிலையான மற்றும் தரமான பாதையாக இருப்பு பாதை அமைக்கப்படும். அதிவேக ரயில்கள் அதிகபட்சமாக 350 கி.மீ. வேகத்தில் இயக்கப்படும். இந்த ரயிலில் 750 பேர் பயணம் செய்யும் வகையில் திறன் கொண்டு இருக்கும்.

## டெல்லியை வாட்டும் குளிர் - 17 விமானங்கள் ரத்து; ரயில் சேவை கடுமையாக பாதிப்பு

**புதுடெல்லி:** தலைநகர் டெல்லி, பஞ்சாப், ஹரியாணா உள்ளிட்ட வட மாநிலங்களிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் கடும் குளிர் நிலவுகிறது. குளிருடன் கடும் பனிமூட்டம் நிலவுவதால், டெல்லி பாலம் மற்றும் சஃப்டர்ஜங் விமான நிலையங்களில் காணும் திறன் 500 மீட்டருக்கும் குறைவாக இருக்கிறது. டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் 30 விமானங்கள் தாமதமாகின. 17 விமானங்களின் சேவை முழுமையாக ரத்து செய்யப்பட்டன. விமானங்கள் புறப்பாடு, தரையிறங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பயணிகள் விமான நிலையங்களில் மணிக் கணக்கில் காத்திருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று (ஜன.16) காலை வெளியிட்ட அறிக்கையில், “பஞ்சாப் முதல் வடகிழக்கு மாநிலங்கள் வரை அடர்த்தியான

பனிமூட்டம் நிலவுகிறது. டெல்லி, ஹரியாணா, வடக்கு மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பிஹார், மேற்குவங்கத்தில் கடுமையான பனிமூட்டம் நிலவுகிறது. கிழக்குப் பகுதிகளிலும் பரவலாக பனிமூட்டம் நிலவுகிறது. குளிர்ந்த காற்றும், அடர்ந்த பனிமூட்டமும் அடுத்த 48 மணி நேரத்துக்கு தொடரும். இதனால் டெல்லிக்கு செவ்வாய் மற்றும் புதன்கிழமைக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்படுகிறது. காலை நேரத்தில் அடர் பனிமூட்டம் தொடரும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று காலை டெல்லியில் குறைந்தபட்ச வெப்பநிலை 5 டிகிரி செல்சியஸாகப் பதிவாகியிருந்ததாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடும் பனிமூட்டம் நிலவுவதால், டெல்லி பாலம் மற்றும் சஃப்டர்ஜங் விமான நிலையங்களில் காணும் திறன் 500 மீட்டருக்கும் குறைவாக இருக்கிறது. இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் 30 விமானங்கள் தாமதமாகின. 17 விமானங்களின் சேவை முழுமையாக ரத்து செய்யப்பட்டன.

நேற்றும் (திங்கள்கிழமை) பனிமூட்டம் நிலவியதால் டெல்லியில் இருந்து மட்டும் 5 விமானங்கள் மாற்றிவிடப்பட்டன. 100 விமானங்கள் தாமதமாகச் சென்றன. புதுடெல்லி ரயில் நிலையத்தில் இருந்து 30 ரயில்கள் ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டன. ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

## 2023-ம் ஆண்டுக்கான பிஃபாவின் சிறந்த வீரராக மெஸ்ஸி தேர்வு



**லண்டன்:** உலக கால்பந்து சம்மேளனமான பிஃபாவின் 2023-ம் ஆண்டுக்கான சிறந்த வீரராக அர்ஜென்டினா வீரர் லயோனல் மெஸ்ஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார். 3-வது முறையாக இந்த விருதை மெஸ்ஸி பெறுகிறார்.

இந்த விருதுக்காக நடந்த வாக்கெடுப்பில் மெஸ்ஸி அதிக புள்ளிகள் பெற்று விருதைத் தட்டிச் சென்றார். அவருக்கு அடுத்தபடியாக மான்செஸ்டர் சிட்டி கால்பந்து அணி வீரர் எர்லிங் ஹாலந்து சற்றே குறைந்த அளவில் புள்ளிகள் பெற்றார்.

ஸ்பெயின் கால்பந்து வீராங்கனை அய்டானா பான்மாட்டி, 2023-ம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீராங்கனை விருதைத் தட்டிச் சென்றார். ஸ்பெயினுக்கு உலகக் கோப்பையைப் பெற்றுத் தந்ததில் பெரும் பங்காற்றினார் அய்டானா. மேலும் சாம்பியன்ஸ் லீக் கால்பந்துப் போட்டியில் பார்சிலோனாவுக்கு தலைமையை ஏற்றிருந்தார் அய்டானா. கடந்த ஓராண்டில் அய்டானா பாலோன் டி ஆர், கோல்டன் பால் விருது, யுஇஎஃப்ஏ விருது ஆகியவற்றையும் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் கல்வி | 2023 ஆம் ஆண்டில் இந்திய மாணவர்களின் வருகை 86% சரிவு: அமைச்சர் தகவல்



**ஒட்டாவா:** இந்தியாவில் இருந்து கனடாவுக்கு படிக்கச் செல்லும் மாணவர்களில் கடந்த ஆண்டு 86% சரிவு ஏற்பட்டதாக அந்நாட்டின் குடியேற்றத்துறை அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர்,
"இந்தியா - கனடா இடையேயான உறவில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இங்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துவிட்டது. இரு நாடுகளுக்கு இடையேயான ராஜதந்திர உறவு எவ்வாறு மேம்படும் என்பது குறித்து என்னால் சொல்ல முடியாது. அதற்கான ஒளி தெரியவில்லை" என தெரிவித்தார். கடந்த 2022-ன் கடைசி 3 மாதங்களில் கனடாவுக்குச் சென்ற இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 8 ஆயிரத்து 940 ஆக இருந்த நிலையில், 2023-ன் கடைசி 3 மாதங்களில் இந்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 910 ஆக சரிந்ததாக கனடா வெளியிட்டுள்ள அதிகாரபூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், கனடா செல்லும் இந்திய மாணவர்களில் 86% சரிவு ஏற்பட்டுள்ளது.

“மூன்று காரணங்களால் இந்திய மாணவர்கள் கனடாவுக்குப் பதிலாக வேறு நாடுகளை தேர்வு செய்யத் தொடங்கி உள்ளனர். ஒன்று, இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டிருக்கும் கசப்பான உறவு. இரண்டாவது, இந்திய மாணவர்கள் தங்குவதற்கு இங்கு போதுமான அளவு வீடுகள் இல்லாதது. மூன்றாவது, இங்குள்ள பல கல்வி நிலையங்களில் போதுமான கல்வி வசதிகள் இல்லாதது” எனத் தெரிவித்துள்ளார் கனடாவின் ஒட்டாவாவில் உள்ள இந்திய தூதரக ஆணையர் குருஸ் சுப்ரமணியன்.

இந்திய மாணவர்களின் வருகை காரணமாக கனடாவில் உள்ள கல்வி நிறுவனங்கள் அதிக அளவில் பொருளீட்டின. 16.4 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இதன் மூலம் வருவாய் வந்த நிலையில், அது தற்போது குறையத் தொடங்கிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியா - கனடா இடையேயான உறவில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக இந்திய மாணவர்கள் செல்வது குறைந்துள்ள அதேநேரத்தில், இந்திய மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க கனடாவும் முயன்று வருகிறது. இது குறித்து

தெரிவித்த குடியேற்றத் துறை அமைச்சர் மார்க் மில்லர், இந்த ஆண்டின் முதல் பாதியில் கனடாவுக்கு வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை பாதியாகக் குறைக்க அரசு சில நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி உள்ளது என கூறியுள்ளார். கனடாவுக்கு வரும் வெளிநாட்டு மாணவர்களில் இந்திய மாணவர்கள்தான் முதலிடத்தில் இருக்கிறார்கள். கடந்த 2022ல் 2,25,835 மாணவர்கள் கனடா சென்றனர். இது கனடாவுக்குச் சென்ற வெளிநாட்டு மாணவர்களில் 41% என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்




**புதுடெல்லி:** பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டுள்ளது. ஜெய்ஷ் அல்-அட்ல் (Jaish al-Adl) என்ற தீவிரவாத அமைப்பை குறிவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. இதில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும், மூன்று பேர் காயமடைந்துள்ளதாகவும் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில் பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டுள்ளது பதற்றத்தை கூட்டியுள்ளது. அண்மையில் ஈராக், சிரியா மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டிருந்தது. இந்த சூழலில் பாகிஸ்தானை இப்போது தாக்கியுள்ளது. முன்னதாக, இம்மாத தொடக்கத்தில் ஈரானில் நடந்த காசிம்

சுலைமானி நினைவேந்தல் நிகழ்வில் நடந்த குண்டு வெடிப்பில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் நடந்த தாக்குதல்களில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதாக ஈரான் நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தின் மலைப்பகுதியில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தகவல். ஈரான் - பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பாகிஸ்தான் பகுதியில் சுமார் 50 கி.மீ தொலைவில் உள்ள பகுதியில் தாக்குதல் நடந்துள்ளது. ஜெய்ஷ் அல்-அட்ல் தீவிரவாத அமைப்பு கடந்த 2012-ல் நிறுவப்பட்டது. எல்லைப் பகுதியில் பணியாற்றும் ஈரான் போலீஸாரை கடந்த காலங்களில் இவர்கள் கடத்தியுள்ளதாக தகவல்.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் நாட்டின் வான்வெளியில் ஈரான் அத்துமீறி நுழைந்து நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மூன்று சிறுமிகள் காயமடைந்துள்ளனர். இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. தீவிரவாதம் பொதுவான அச்சுறுத்தல் என பாகிஸ்தான் சொல்லி வருகிறது. அதை தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. இந்த மாதிரியான தாக்குதல்கள் அண்டை நாடுகளில் நம்பிக்கையை பாழாக்கும் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

## மார்ச் 15-ம் தேதிக்குள் இந்திய வீரர்கள் வெளியேற வேண்டும்: மாலத்தீவு அதிபர் முகமது முய்சு கெடு



**புதுடெல்லி:** மார்ச் 15-ம் தேதிக்குள் மாலத்தீவில் இருந்து இந்திய வீரர்கள் வெளியேற வேண்டும் என்று மாலத்தீவு அதிபர் முகமது முய்சு கெடு விதித்துள்ளார்

கடந்த ஆண்டு செப்டம்பரில் மாலத்தீவு அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் மக்கள் தேசியகாங்கிரஸ் தலைவர் முகமது முய்சுபுதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டார். சீன ஆதரவாளரான அவர் இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். மாலத்தீவில் 88 இந்திய ராணுவ வீரர்கள் முகாமிட்டுள்ளனர். அவர்கள் வெளியேற வேண்டும் என்று முகமது முய்சு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்த சூழலில் மார்ச் 15-ம் தேதிக்குள் மாலத்தீவில் இருந்து இந்திய வீரர்கள் வெளியேற வேண்டும் என்று அதிபர் முய்சு கெடு விதித்துள்ளார்.

இதுகுறித்து மாலத்தீவு அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் அப்துல்லா நசீம் இப்ராகிம் கூறும்போது, “இந்திய வீரர்களை வெளியேற்றுவது தொடர்பாக இரு நாடுகளை சேர்ந்த உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவின் முதல் கூட்டம் மாலத்தீவு தலைநகர் மாலேவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மார்ச் 15-க்குள் இந்திய வீரர்கள் வெளியேற அதிபர் முய்சு அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் லட்சத்தீவுக்கு சென்றார். இதுதொடர்பாக மாலத்தீவை சேர்ந்த அமைச்சர்கள், தலைவர்கள் எதிர்மறையாக விமர்சனம் செய்தனர். இதன்காரணமாக மாலத்தீவுக்கு சுற்றுலா செல்வதை இந்தியர்கள் முழுமையாக புறக்கணித்து உள்ளனர். இந்த விவகாரத்தால் இந்தியா, மாலத்தீவு இடையிலான உறவில் விரிசல் அதிகரித்து வருகிறது.

இந்திய வெளியுறவு துறை வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த 2010 மற்றும் 2013-ம்ஆண்டுகளில் மாலத்தீவுக்கு இந்தியா சார்பில் 2 ஹெலிகாப்டர்கள் பரிசாக வழங்கப்பட்டன. கடந்த 2020-ம் ஆண்டில் அந்த நாட்டுக்கு ஒரு விமானம் பரிசாக வழங்கப்பட்டது.

தேடுதல், மீட்புப் பணிகளுக்கு இந்த ஹெலிகாப்டர்கள், விமானம்பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் இயக்கம், பராமரிப்புக்காக

இந்திய வீரர்கள் மாலத்தீவில் முகாமிட்டு உள்ளனர். இந்திய வீரர்கள் ராணுவரீதியிலான எந்த பணியிலும் ஈடுபடவில்லை.

தற்போதைய அதிபர் முய்சு சீன ஆதரவாளர் என்பதால் இந்திய வீரர்களை வெளியேற்ற விரும்புகிறார். இதுதொடர்பாக மத்திய அரசு உரிய முடிவு எடுக்கும். இருநாடுகள் தரப்பில் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு இந்திய வெளியுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

EVA STALIN IAS ACADEMY